மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்பேரில், அரசுக் கல்லூரி அலுவலகர்களுக்கு அளிக்கப்படும் சம்பள விகிதங்கள் பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி. நகர ஈட்டுப்படி முதலியன தனியார்/ஆசிரியர்கள் மேலும்/கல்லூரி அலுவலர் களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. கீழ் ஓய்வு ஊதியத்தை தனியார் கல்லூரி அலுவலர்கட்கும் விரிவாகும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(உ) வினாவுக்கு இடமில்லை.

Inscriptions of the Chola period near Tiruthani

* 302 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the State Department of Archaeology has unearthed inscriptions of the Chola period near Tiruthani in 1971, and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) திருத்தணிக்கு அருகில் விளக்கணம்பூண்டியில் உள்ள தொன்மையான ஆலயம் ஒன்றில் இரு கல்வெட்டுகள், அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஒன்று கி.பி. 9-ம் நூற்றாண்டின் இறுதியில் இப்பகுதியை ஆண்ட அரசனது கால கல்வெட்டு ; மற்றொன்று கி.பி. 13-ம் நூற்றாண்டில் ஆண்ட விஜய கண்ட கோபாலன் என்னும் சோழ மன்ன னுடையது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Some three months back Archaeological Department of our State published new inscription connected with the Chola and Pallava Kings, and specially with regard to Mahendravarman I. They are important for fixing the Pallava chronology. But it is published piecemeal. May I request the Hon. Minister to instruct the University to publish the entire details in the interest of the public?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அப்படிப்பட்ட ஆராய்ந்த கருத்துக்களையெல்லாம் வெளியிடுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கி றார்கள். விரைவில் அதுபற்றி முடிவுகள் வெளிப்படும்.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, திருத்தணிக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த சோழர் கால கல்வெட்டில் அடங்கியுள்ள செய்திகள் என்ன என்பதை அரசு அறியுமா ?

1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப்பற்றிய விவரங்களைத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோயிலைப்பற்றிய குறிப்புகள் தெரிகின்றன. அந்தக் கோயில் விசயாலய சோழச்சுரம் என்று கோயிலுக்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. தஞ்சையில் சோழப் பேரரசை நிறுவியவன் விசயாலய சோழன். அந்த அரசனின் காலத்திலோ அல்லது அவன் கீழ்ப்பட்ட சிற்றரசன் ஒருவனாலோ கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தக் கல்வெட்டைப்பற்றித் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆராய்கிறார்கள், பிறகு வெளியிடப்படும்.

Tamil in Indore University

* 303 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government has received any communication from Indore University regarding introduction of Tamil in that University; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தூர் பல்கலைக் கழகத்தில் தமிழ் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பதற்காக 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தமிழாசிரியரைத் தமிழ்நாட்டிலிருந்து கொடுக்க வேண்டுமென்றும், அதற்காக பாதி அளவாவது தாங்கள் சம்பளம் கொடுப்பதாகவும், மற்ற பாதியை தமிழக அரசு கொடுக்க வேண்டுமென்றும். பின்னால் தாங்களே ஏற்றுக்கொள்வது என்றும் சொல்லி ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தூர் பல்கலைக் கழகத்திலிருந்து இப்படிப்பட்ட குறிப்பு எதுவும் அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. வேறு பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், பஞ்சாப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பிரிவிற்காக 3 லட்சம் ரூபாய் ஒதுக்கி தமிழ் சொல்லிக்கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருப்பதாக பஞ்சாப் அரசு தமிழக அரசுக்கு அறிவித்திருக்கிறது. 16—7—1969 அன்று உஸ்மானியா பல்கலைக் கழகத்திற்கு தமிழ் பாடத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு 25,000 ரூபாய் வீதம் 5 ஆண்டுக் காலத்திற்கு இந்த அரசு வழங்க ஒப்புதல் அளித்திருக்கிறது. 27—10—1969 அன்று ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்திற்கு தமிழ்ப் பாடத்திற்காக ரூ. 10,000 ஆண்டு ஒன்றுக்கு வீதம் 5 ஆண்டுகளுக்கு இந்த அரசு வழங்க ஒப்புதல் அளித்திருக்கிறது. 1—4—1970-ல் ஆக்ரா பல்கலைக் கழகத்திற்கு 1970-71-ல் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்காக ரூபாய் 1,532 வழங்கப்பட்டிருக்கிறது.